தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்தில், திருவேற்காடு மற்றும் ஆவடி மாநகராட்சி அடுத்த மிட்டினமல்லியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், உங்களுடன் ஸ்டாலின் முகாமினை பார்வையிட்டு பொதுமக்களின் குறைகளை உடனடியாக தீர்க்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினர். உடன் மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப், மேயர் உதயகுமார், நகர் மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி, அம்மு விஜயன், ஜோதிலட்சுமி, சண் பிரகாஷ், பொன்.விஜயன், ஜி.ராஜேந்திரன், ஆவடி மாநகராட்சி பணிக்குழு தலைவர் சா.மு.நா.ஆசிம்ராஜா, ஆவடி மாநகராட்சி ஆணையர் சரண்யா திட்ட இயக்குனர் வை.ஜெயகுமார், காவல் துணை ஆணையர் ஜமன் ஜமால், மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கவுன்சிலர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் மற்றும் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுபிரமணியன் ஆலோசனைப்படி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ச.சங்கர் கணேஷ் எம்.சி. ஏற்பட்டில் நடைபெற்றது.இதில் கழக அமைப்பு துணைச் செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ,இளம் பேச்சாளர் தி.கோகுல், காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ,ஏ., எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ, பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் ஆகியோர் சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 146வது நாள்!

துறைமுகம் கிழக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,ஜூலை.16- முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 146 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (15.7.2025) துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55, தாதா முத்தியப்பன் தெரு, கோவிந்தப்பா தெரு சந்திப்பு. 2) துறைமுகம் மேற்கு பகுதி” வட்டம் 57, யானை கவுனி பாலம், ஹவுசிங் போர்டு அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள்

“தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், எஸ்.முரளி, எஸ். இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம். தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, P.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா. பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R. அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க. பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

மழைநீர் வடிகால்களில் வண்டல்கள் - கழிவுகளை முதன்முறையாக

நவீன சூப்பர் சக்கர் இயந்திரம் மூலம் அகற்றி தூர்வாரும் பணி!

மேயர் திருமதி ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்! துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை,ஜூலை.16- பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் அமைத்தல் மற்றும் தூர்வாருதல், நீர்வழிக்கால்வாய்களை மேம்படுத்துதல் மற்றும் தூர்வாருதல், புதிய குளங்கள் அமைத்தல் மற்றும் மறுசீரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, மேயர் திருமதி ஆர்.பிரியா, வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களில் உள்ள வண்டல்கள் மற்றும் கழிவுகளை விரைவாகவும், முழுமையாகவும் அகற்றி அப்புறப்படுத்திடும் வகையில், முதன்முறையாக நவீன சூப்பர் சக்கர் இயந்திரம் மூலம் மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணியினை தொடங்கி வைக்கும்

விதமாக, இராயபுரம் மண்டலம், வார்டு-58, ஈ.வி.கே.சம்பத் சாலையில் உள்ள மழைநீர் வடிகாலில் நவீன சூப்பர் சக்கர் இயந்திரம் மூலம் தூர்வாரும் பணியினை (14.07.2025) அன்று தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மழைநீர் வடிகாலில் உள்ள வண்டல் மண்ணின் அளவை சிறிய வகை ரோபோ (Crawler) மூலம் கண்டறிந்து, நவீன கேமராக்கள் மூலம் வண்டல்கள் மற்றும் கழிவுகளை அகற்றுவதற்கு முன்பும், நவீன சூப்பர் சக்கர் இயந்திரம் மூலம் வண்டல்கள் அகற்றப்பட்ட பின்பும் புகைப்படம் எடுத்து மழைநீர் வடிகால்களில் வண்டல் மண் அகற்றப்பட்டது உறுதி செய்யப்படும் பணிகளைப் பார்வையிட்டார்.

மழைநீர் வடிகால்களில் உள்ள வண்டல் மண்ணை நவீன சக்தி வாய்ந்த சூப்பர் சக்கர் இயந்திரம் (Super Sucker) மூலம் அகற்றி, அதனை அருகிலேயே கொட்டாத வகையில் ஒரு குழாயின் வழியாக மூடிய கனரக வாகனத்தில் (Dumper) சேகரித்து, கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு சென்று சேர்க்கப்படுகிறது. இந்த இயந்திரத்தின் மூலம் நாளொன்றுக்கு ஒரு கிலோ மீட்டர் வரை மழைநீர் வடிகால்களில் தூர்வாரி அப்புறப்படுத்தப்படும்.

மேலும், தூர்வாரும் வண்டல்கள் அருகில் கொட்டப்படுவது முழுமையாக தவிர்க்கப்படுவதால், மழையின் காரணமாக மீண்டும் மழைநீர் வடிகால்களில் இந்த வண்டல்கள் சென்று சேர்வது தடுக்கப்படுகிறது. மழைநீர் வடிகால்களில் உள்ள வண்டல்கள் முழுமையாக தூர்வாரப்படுவதை, தூர்வாரப்படுவதற்கு முன்பும், பின்பும் ரோபோ கேமரா வழியாக புகைப்படம் எடுத்து வண்டல்கள் அகற்றப்படுவது உறுதிசெய்யப்படுகிறது. இதன் காரணமாக மழைநீர் வடிகால்களில் தங்குதடையின்றி மழைநீர் செல்வதற்கு ஏதுவாக அமைவதுடன், அப்பகுதிகளில் மழைநீர் தேக்கமின்றி விரைந்து வடிந்து செல்ல வழிவகை ஏற்படுகிறது.

ஒவ்வொரு வருடமும் சராசரியாக 1000 கி.மீ மழைநீர் வடிகால் தூர்வாரப்பட்டு வருகின்றது. இதில் முதற்கட்டமாக ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இரண்டு வாகனங்கள் வீதம் வடக்கு, மத்திய மற்றும் தெற்கு ஆகிய மூன்று வட்டாரங்களில் 6 நவீன சூப்பர் சக்கர் வாகனங்கள் மூலம் 120 கி.மீ நீளத்தில் மழைநீர் வடிகால்களை தூர்வார நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தேவைக்கேற்ப வாகனங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி தூர்வாரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ.10 கோடி வீதம் இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர் திருமதி ராஜேஸ்வரி ஸ்ரீதர், மேற்பார்வைப் பொறியாளர் (மழைநீர் வடிகால்) ஏ.எஸ்.முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் ஞா.பிரபு தலைமையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் தாம்பரம் துணை மேயர் கோ.காமராஜ், கழக சொற்பொழிவாளர்கள் முகலிவாக்கம் தங்கம், இளம் பேச்சாளர் பூபதி, லோ. தனவந்தன், மண்டலக் குழுத் தலைவர் வே.கருணாநிதி, பகுதிக் கழகச் செயலாளர் த.ஜெயக்குமார், மாவட்டக் கழகப் பிரதிநிதி எஸ்.கே.நெப்போலியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாநகர இளைஞரணி அமைப்பாளர் சத்திய பிரபு, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ச.பிரபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் - கடலூர் மாவட்டம் - சிதம்பரத்தில்

“உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் தொடக்கம்!

சைதாப்பேட்டையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

சென்னை,ஜூலை.16- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை இன்று (15.07.2025) கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், அடையாறு மண்டலம், வார்டு168, சைதாப்பேட்டை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினைப் பார்வையிட்டு, மக்கள் வழங்கிய மனுக்கள் மீது உடனடி தீர்வு காணப்பட்டு அதற்கான உத்தரவுகளை வழங்கினார். பிறகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம்

‘உங்கள் வீடு தேடி வரும் அரசு’ என்கின்ற புதிய இலட்சியத்துடன் “உங்களுடன் ஸ்டாலின்” எனும் புதிய திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று சிதம்பரம் நகராட்சியில் முறையாக தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் சென்னையில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் அந்த முகாமினை தொடங்கி வைத்தார்கள். தொடர்ச்சியாக இன்றைக்கு சென்னையைப் பொறுத்த வரை 7 இடங்களில் இந்த முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த முகாம்கள் குறித்தான விவரங்கள் பொதுமக்களுக்கு நன்கு தெரியும் வகையில் மிகச் சிறப்பாக விளம்பரம் படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்களின் நிறை, குறைகளை நேரிடையாக கேட்டு தெரிந்து கொள்ளும் வகையிலும், அந்தக் குறைகளுக்கு தீர்வு காணும் வகையிலும், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் சிதம்பரம் நகராட்சியில் தொடங்கி வைக்கப்பட்டிருக்கும் இந்த திட்டம் ஜீலை 15 தொடங்கி நவம்பர் வரை 10,000 இடங்களில் இந்த முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. இந்த முகாம்களில் முதல் கட்டமாக சென்னையைப் பொறுத்தவரை, 109 இடங்களில் நடைபெற தொடங்கி அதில் 7 இடங்களில் மிகச் சிறப்பாக முகாம்கள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு முழுவதும் நடைபெற இருக்கும் 10,000 இடங்களில் ஊரகப் பகுதிகளைப் பொறுத்த வரை 15 துறைகளின் வாயிலாக 45 சேவைகளும், நகர்ப்புறங்களைப் பொறுத்த வரை 13 துறைகளின் வாயிலாக 43 சேவைகளும், இன்றைக்கு வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் இன்று முதல் சென்னையில் உள்ள 200 வார்டுகளிலும், வார்டுக்கு 2 என்கின்ற வகையில் 400 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. இன்று சென்னையில் மாதவரம் மண்டலத்தில் ஒரு இடத்திலும், தண்டையார் பேட்டை மண்டலத்தில் ஒரு இடத்திலும், திருவிக நகர் மண்டலத்தில் ஒரு இடத்திலும், தேனாம்பேட்டை 2 மண்டலத்திலும், அதேபோல் வளசரவாக்கம் மற்றும் அடையார் மண்டலத்தில் ஒரு இடத்திலும் என மொத்தம் 7 இடங்களில் இந்த முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த முகாம்களுக்கு வருகின்ற மாற்றுத்திறனாளிகளுக்கும் தனித்தனியே மூன்று சக்கர வாகனங்களில் தன்னார்வலர்களை அழைத்துச் சென்று அவர்களுக்கான சேவைகளை பெற்றுத்தர உள்ளது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை

அனைத்து முகாம்களிலும் 13 துறைகளில் 43 சேவைகளில் குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் புதிதாக பயன்பெற இருப்பவர்கள் அதிகம் பேர் வந்துக் கொண்டு இருக்கும் காரணத்தினால் அரங்குகள் அவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கான விண்ணப்பம் படிவங்கள் தருவதோடு மட்டுமல்லாமல் அந்த விண்ணப்ப படிவங்களை உடனடியாக அங்கேயே பூர்த்தி செய்து தருகின்ற வகையில் உதவிக்கு துறைகளின் சார்பில் ஆட்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாநகராட்சி பகுதிகளில் உள்ள 13 துறைகளில் ஒவ்வொரு துறைக்கும் ஒரு அரங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த அரங்குகளில் அந்தந்த துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் இருக்கிறார்கள். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, எரிசக்தித்துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறை, சிறுபான்மையினர் நலத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, சிறப்பு திட்ட செயலாக்கத்துறை என்று 13 துறைகளின் வாயிலாக 43 சேவைகள் வழங்கப்படவிருக்கிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகையைப் பொறுத்தவரை இந்த மனுக்கள் சென்னையில் 400 முகாம்கள் நடைபெற உள்ளது. இந்த முகாம்களில் எங்கே வேண்டுமானாலும் பெற்று, சரியான தகவல்களோடு பூர்த்தி செய்து, அங்கேயே தரலாம். எனவே இந்த மகளிர் உரிமைத் தொகைக்கான விண்ணப்பங்கள் வெளியில் யாரிடமும் கிடைக்காது. எந்த அலுவலகத்திலும் கிடைக்காது. தனி நபர்களோ அல்லது இதற்கான இடைத்தரகர்களோ என்று யாரும் இல்லை. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்கள் வீடு தேடி வரும் அரசு என்கின்ற இலட்சியத்தோடு இந்த முகாம்களை தொடங்கி இருக்கும் காரணத்தினால் பொதுமக்கள் அவரவர் வீடுகள் அருகில் நடைபெறுகின்ற முகாம்கள் வருகை புரிந்து மனுக்களை பூர்த்தி செய்து அங்கேயே தரலாம். இந்த முகாம்களில் வருகின்ற விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு உரிய பயனாளிகள் பட்டியல் விரைவில் வெளியிடப்படும். எனவே பொதுமக்கள் முகாம்களில் மட்டுமே விண்ணப்பங்களை பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இந்த முகாம்கள் காலை 09 மணியிலிருந்து பிற்பகல் 03 மணி வரை இந்த முகாம்கள் நடைபெறவிருக்கிறது. 03மணிக்கு கூட கூட்டம் அதிகமாக வந்துவிட்டால் வந்தவர்கள் ஏமாந்து திரும்ப செல்லாத வகையில் அவர்களையும் உள்ளே அனுமதித்து அவர்களுக்கான சேவைகள் வழங்கப்படவிருக்கிறது. சைதாப்பேட்டை தொகுதியைப் பொறுத்த வரை வரும் 22.07.2025 அன்று சின்னமலை புனித தோமையார் சமூக கூடம், 30.07.2025 ஜாபர்கான் பேட்டை, கலைஞர் பவள விழா திருமண மண்டபத்திலும், 05.08.2025 அன்று கோட்டூர் வெங்கடேச பெருமாள் திருமண மண்டபத்திலும், 07.08.2025 கிண்டி, சக்கரபாணி தெருவில் உள்ள சமுதாய நலக்கூடம் என்று முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. முகாம்கள் எங்கெங்கு நடைபெறும் என்பதை மாநகராட்சி அலுவலர்களும், மக்கள் பிரதிநிதிகளும் ஒருங்கிணைந்து துண்டு பிரசுரங்கள் வாயிலாகவும், சுவரொட்டிகள் வாயிலாகவும், தன்னார்வலர்கள் மூலமாகவும் மக்களுக்கு முழுமையான விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட்டு வருகிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர் திரு.ஆர்.துரைராஜ், மண்டல அலுவலர் (பொ) திரு.ஹார்டின் ரோஸாரியோ, மாமன்ற உறுப்பினர் திரு.தா.மோகன்குமார் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

இன்று 6 வார்டுகளில் நடைபெறகிறது!

சென்னை,ஜூலை.16- பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று (16.07.2025) திருவொற்றியூர் மண்டலம், வார்டு-1ல் கே.எச்.சாலை, காமராஜ் நகர் சமூக நலக் கூடம், மணலி மண்டலம், வார்டு-20ல் காமராஜர் சாலை மணலி மண்டல அலுவலகம், அம்பத்தூர் மண்டலம், வார்டு-79ல் விஜயலட்சுமிபுரம், பி.டி.ஆர். திருமண மண்டபம், அண்ணாநகர் மண்டலம், வார்டு-94ல் சிட்கோ நகர், ராஜராஜேஸ்வரி திருமண மண்டபம், ஆலந்தூர் மண்டலம், வார்டு-167ல் நங்கநல்லூர், 100அடி சாலை ஸ்கேட்டிங் மையம், அடையாறு மண்டலம், வார்டு-179ல் குப்பம் கடற்கரை சாலை, சமூக நலக் கூடம் ஆகிய 6 வார்டுகளில் நடைபெற வுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர், மயிலை சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அவர்களின் வழிகாட்டுதலில் “மெட்ராஸ் என்பதை சென்னை என மாற்றிய கலைஞர்” என்ற தலைப்பில் கலைஞர் அவர்களின் சாதனைகளை விளக்கும் வகையில் மற்றும் ஓரணியில் தமிழ்நாடு என்ற கழக தலைவர் அவர்களின் முன்னெடுப்பை பொது மக்களுக்கு விளக்கும் வகையில் மாவட்ட கழகம் சார்பில் பிரச்சார வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டு 125 ஆ வட்டத்தில் பல்வேறு இடங்களில் பிரச்சாரம் செய்யப்பட்டது. இந்த பிரச்சார பயணத்தில் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் விஜய் வெங்கடேசன், மயிலை மேற்கு பகுதி அவை தலைவர் ஜி.ராஜேந்திரன் பகுதி இலக்கிய அணி தலைவர் பி.எஸ்.ஆறுமுகம் ஆகியோர் மக்களிடம் திராவிட மாடல் அரசின் சாதனைகளை, கலைஞர் சென்னைக்கு கொண்டுவந்த திட்டங்கள் பற்றி விளக்கி பேசினார்கள். இந்த நிகழ்வில் மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி , 125 அ வட்ட செயலாளர் வி.வெற்றிவேல் பாக உறுப்பினர் வட்ட, பகுதி கழக நிர்வாகிகள் 125 அ வட்ட டுமீல் குப்பம், பொதுமக்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.